AR
423

ச. தியாகராசன்

தமிழறிஞர் தெ.பொ.மீ. நூற்றாண்டு விழா-2001

தமிழ் வளர்ச்சித் துறை

தெ.பொ.மீ

தமிழறிஞர் தெ.பொ.மீ.

பிறப்பு	:	8–1–1901
பெற்றோர்	:	திரு. பொன்னுசாமி – திருமதி. ருக்குமணி
ஊர்	:	சென்னை – சிந்தாதிரிப்பேட்டை
கல்வி	:	வித்துவான், பி.ஏ., பி.எல்., எம்.ஏ., (வரலாறு) எம்.ஓ.எல்., பல்வேறு இந்திய மொழிகள் – ஐரோப்பிய மொழிகளில் படிப்பு – புலமை
பணியும் தொண்டும்	:	1924 – சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர்
		1925 – அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவர்
		1927 முதல் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு
		1929 முதல் இறுதிவரை : சென்னை சிந்தாதிரிப்பேட்டைப் பள்ளிகளுக்குச் செயலாளர், தாளாளர்.
		1935 தேசிய ஆயுள் காப்பீட்டுக் கழக இயக்குநர்
		1936 வேதாந்த சங்கத் தலைவர்
		1936–41 சென்னை நகராண்மைக் கழகச் சிறப்பு உறுப்பினர்
		1944–46 அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் – தலைவர்
		1954–58 சென்னை மாநிலக் கல்லூரியில் முதன்மைத் தமிழ்ப் பேராசிரியர்
		1958 அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்க்கலைத் துறைத் தலைவர் – திராவிட

மொழித்துறைத் தலைவர் – பின்னர் மொழியியல் துறைத் தலைவர்

1962 அமெரிக்கச் சிகாகோ பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு

1966–71 மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர்

1974 திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் அனைத்துலக திராவிட மொழியியல் பள்ளியின் ஆய்வாளர். இறுதிக் காலம் வரை தியானம், ஆன்மீகம் பரப்புதல், தமிழாய்வு.

நூல்கள் : தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், மொழியியல், ஒப்பிலக்கணம், வரலாறு ஆய்வு முதலிய பல்வேறு துறைகளிலும் 33 தமிழ் நூல்கள் 16 ஆங்கில நூல்கள்.

மறைவு : 27–8–1980

தெ.பொ.மீ

'அன்பின் திருவுரு', 'ஞானத்தின் திருவுரு' என்றெல்லாம் கண்ணப்பரையும், சம்பந்தரையும் பாராட்டுவர் ஆன்றோர். நமது பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தொண்டின் திருவுருவம்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்தவர். தாம் கற்ற பெருங்கல்வியினைப் பிறர்க்கெனவே வழங்கிய வள்ளல்; தம்பால் உள்ளனவற்றில் சிறந்தனவற்றைத் தம் தகுதியறிந்து வழங்கிவந்தனர் பாரி போன்ற பெரு வள்ளல்கள்; தம்பாலுள்ளனவற்றில் சிறந்த அறிவுச் செல்வத்தை வாரிவாரி வழங்கியவர் நம் பேராசிரியர். 'பாரியும் பரிசில ரிரப்பின் வாரேன் என்னான் அவர் வரையன்னே' எனப் பாரியின் வள்ள்ன்மையைப் பாராட்டுமுகமாகப் பாடினார் கபிலர்; பேராசிரியரோ தம்மை நாடிவந்த மாணவர்களுக்கென்று தம்மையே ஈந்து விட்டார்.

அல்லும் பகலும் பிறர்க்கெனவே உழைத்ததைப் பேராசிரியரோடு பழகும் வாய்ப்புப் பெற்றவர்களறிவார்கள். அவர் பணியெல்லாம் அறிவுத்துறை ஒன்றிலேயே பெரிதும் அடங்கியுள்ளது; எந்தப் பணியினை மேற்கொண்டாலும் அதற்குத் தம் நேரமனைத்தையும் அவர் தந்துவிடுவார். பலநாட்கள் – காலை 4 மணிக்கு மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருவார். இரவு 10 மணிக்கும் அவரோடு மாணவர்கள் இருப்பர். புறத்தே தூற்றித் திரிபவர்களாக விருந்தாலும், அதனையும் மறந்து தம்பால் உதவி வேண்டி வந்தால் தாம் பெற்ற கல்விச் செல்வத்தை அவ்வாறே வழங்கிவிடுவார். தாம் பல ஆண்டுகளாகப் பயின்ற பயிற்சியின் விளைவாகப் பெற்றுள்ள கருத்துகளையும் மாணவர்களுக்கென்றே வழங்கிவிடுவதுண்டு. பேராசிரியர் அவர்களை, நூலெழுதத் தூண்டினால் "நூல்" எழுதுவதற்கென்ன விருக்கிறது, என்னிடமுள்ள கருத்துகளை மாணவர்களுக்கென்று தந்துவிட்டால் அவர்கள் வாயிலாக உலகத்துக்குத் தந்துவிடுகிறேன்', எப்படியாவது கருத்துகளைப் பிறர் அறியவேண்டும் என்பதுதானே நூலெழுதும் நோக்கம் என்று பதில் கூறுவதுண்டு.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பேராசிரியர்களுக்குள்ளே நம் பேராசிரியர் ஒரு சிறந்த இடம் பெற்றுள்ளார். நம் பேராசிரியர் தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஆங்கில இலக்கியங்கள் இவற்றின் பயிற்சியோடு பல்வேறு அறிவுத் துறைகளிலும் அடிப்படையான, தெளிவான பயிற்சி பெற்றவர். 'பொருளாதாரத்தில்' பட்டம் ஒன்றும் பெற்றுள்ளார். வரலாறு அவர்களுக்கு எம்.ஏ., பட்டத்தை நல்கிற்று. தத்துவம், சமயம், உளநூல், தருக்கம், அறிவியல், மொழிநூல் இவற்றிலெல்லாம் மிகத் தெளிவான அறிவு பேராசிரியருக்கு உண்டு. 1944இல் பேராசிரியர் அண்ணாமலையரசரின் அழைப்பை ஏற்றுத் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்குச் சிறப்புத் தந்த அந்நாளில், பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டிருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பேராசிரியரின் அறிவாற்றலை அறிந்து வியந்ததுண்டு; பொருளாதாரக் கழகம், விஞ்ஞானக் கழகங்களிலெல்லாம் அன்று பேராசிரியர் பேச்சைக் கேட்க முடிந்தது. தமிழாசிரியர் ஒருவர் பிற துறையினரால் வரவேற்கப்பட்டு மதிக்கப்பட்டது தமிழாசிரியர் வரலாற்றில் ஒரு புதுமையாகும். ஒவ்வொரு துறையிலும், தமது அறிவை மேலும் வளர்த்து, பல்வேறு உலக அறிஞர்களும் பாராட்டும் நிலையிலிருந்தவர் இவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1956இல் நடந்த கீழ்க்கலை மாநாட்டின்போது, நமது நாட்டின் துணைக் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர். இராதாகிருட்டினன் அவர்கள் பாராட்டியதனைக் காதாரக் கேட்ட தமிழர்கள், தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் இந்த அளவுக்குப் பாராட்டப்படுவதை நினைந்து இறும்பூதெய்தியிருப்பர். டாக்டர் கே.எஸ்.கிருட்டினன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வந்திருந்த போது, 'ஒரு துறையில் சிறப்பான அறிவு பெறுவதிலேயே பெரிதும் ஆர்வம் காட்டும் இன்றைய உலகு பல துறைகளிலும் தெளிந்த அடிப்படையான அறிவோடு, ஒரு துறையில் சிறந்த அறிவு பெறுவதில் விருப்பமுடையதாக இருக்க வேண்டும். நம் பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார் போன்று' எனத் துணைவேந்தர் தலைமையில் கூறினார். நாம் பெருமிதம் கொள்ளத்தக்க ஒரு பேராசிரியர் இருபதாம் நூற்றாண்டில் நமக்குக் கிடைத்தார், என்று கூறுவதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்.

தமிழ்க் கல்வியிலும் நமது பேராசிரியருக்கு ஒரு சிறப்புண்டு. அவர், பொழுதுபோக்கிற்காகத் தமிழைப் பயின்று தம் தமிழறிவை வளர்த்துக் கொண்டவரல்லர். தமிழின்பால் உள்ள தமது பற்றினால் வரன்முறையாகத் தமிழைப் பயின்றவர். எல்லாச் சிறந்த தமிழ் நூல்களையும் பயின்றவர் என்று கூறத்தக்க நிலையில் திகழ்ந்தவர். பேராசிரியர் தம் இத்தகைய, தமிழன்பிற்கும், பயிற்சிக்கும் ஒரு காரணம் அவர் பிறந்த குடிப்பெருமையேயாகும்.

பேராசிரியர் சிறந்ததொரு தமிழ் மரபைச் சார்ந்தவராவார். திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைப் பற்றி அறியாதார் இல்லை. அவர் மாணாக்கர்களில் ஒருவர் அட்டாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்கள். இவரிடம் தமிழ் பயின்றவரே நம் பேராசிரியரின் தந்தை பொன்னுசாமி கிராமணியார் அவர்கள். தமிழகத்திலேயே ஈடுமெடுப்புமற்ற புலவர் மணியாய் விளங்கிய மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களைப் பற்றித் தம் ஆசிரியர் வாயிலாக அறிந்த பொன்னுசாமிகிராமணியார் அவர்கள் தம் மைந்தரும் அவ்வாறு சிறந்து விளங்கவேண்டுமென்று கருதியே, நம் பேராசிரியருக்கு மகா வித்துவான் பெயரைச் சூட்டினார்.

சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையில் 1901ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8–ஆம் நாளில் தமிழுலகம் தழைப்பதற்கெனவே நம் பேராசிரியர் தோன்றினார். இவரது முன்னோர்கள் அன்றைய செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தென்பட்டினம் என்ற ஊரிலிருந்து சென்னையில் குடியேறியிருந்தார்கள். கோவிந்த நாயக்கர் இடைநிலைப் பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் படித்துத் தம் பதினைந்தாம் வயதிலேயே இவர் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றார்; கோவிந்த நாயக்கர் இடைநிலைப் பள்ளியில் 'அபிதான சிந்தாமணி'யின் ஆசிரியர் திரு. சிங்காரவேல் முதலியார் அவர்களும் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் திருவாளர்கள் கிருட்டிணசாமி முதலியார், கா.ரா. கோவிந்தராச முதலியார் ஆகியோரும் பேராசிரியரின் ஆசிரியர்களாக அமைந்து தமிழ் கற்பித்தனர். பிறகு பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து

பயின்று 1920–இல் பி.ஏ. பட்டம் பெற்றார். இக்கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கிய திரு. கே.பி.இராமநாத ஐயர் என்பார் தமிழின் இனிமையையும் பெருமையையும் இவர்கட்கு எடுத்துக்காட்டினார். மற்றொரு ஆசிரியரான ரோலா என்பார் இலக்கிய நயங்களை உணர இவர்க்கு வழி காட்டினார். அதன்பின் சட்டக் கல்லூரியில் பயின்று 1922 இல் பி.எல். பட்டம் பெற்றார். 1923இல் எம்.ஏ. பட்டம் பெற்றார். 1923 இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராய்ப் பதிவு செய்து கொண்டார். இவற்றால் இவருடைய அறிவின் மாண்பும், நினைவாற்றலும், பயிற்சித் திறமும் விளக்கமாகும்.

பேராசிரியரின் தமிழ்க் கல்வி தந்தையாரால் தூண்டப் பெற்று வளர்ந்து வந்தது போலவே, சட்டக் கல்வியும் தந்தையாரின் தொண்டுள்ளத்தின் விளைவாக ஏற்பட்டதே. நம் பேராசிரியருடைய தந்தையான பொன்னுசாமி கிராமணியாரவர்கள் நூலறிவோடு மதி (இயற்கையறிவு) நலம் சிறந்தவர். பொதுவாகச் சென்னை மக்களும், சிறப்பாகச் சிந்தாதிரிப்பேட்டைவாசிகளும் எல்லா வகையான வெளிவழக்குகளையும் குடும்பச் சிக்கல்களையும் தீர்த்துக் கொள்ள கிராமணியாரவர்களையே நாடி வருவர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவும் உளங்கொள்ளாமல், வம்புதும்புகள் பேசிக் கொண்டு கிராமணியாரிடம் வருவோர் அனைவரும் சிறிது நேரத்திற்குள்ளாகவே மனமகிழ்ச்சியுடன் கைகோத்து இன்மொழி பேசிக் கொண்டு ஒற்றுமையுடன் வீடு திரும்பிச் செல்வர். இங்ஙனம் கிராமணியாருடைய மதிநல மாண்பால், வழக்கு மன்றங்களுக்குச் சென்று தம் காசைக் கரியாக்காமல் உய்ந்தவர் எண்ணிறந்தோர். கிராமணியார் என்ற தம் குடிப்பெயருக்கேற்பக் கிராம மணியக்காரராகவும் கிராம அணியாராகவும் திகழ்ந்த இவர், தாம் செய்துவந்த பணியினைத் தம் மைந்தரும் செய்து சிறந்து விளங்கச் சட்டக் கல்வி இன்றியமையாதது எனக்கண்டு தம் மைந்தரான நம் பேராசிரியரைச் சட்டக் கல்வியைத் துறைபோகக் கற்கும்படிச் செய்தார். சட்டக் கல்வியால், தம்மிலும் சிறந்த தொண்டினைப் பயனொன்றும் கருதாது தம் மைந்தர் ஆற்றவேண்டும் என்பதே தந்தையார் நோக்கமாகும். அவர் நோக்கத்திற்கு ஏற்பவே நம்

பேராசிரியர் பிழைப்பிற்காகச் சட்டக் கல்வியைப் பயன்படுத்தாமல் பொது நலத்திற்காகவே பயன்படுத்தினார்.

பேராசிரியரின் தமையனார் தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்களும், தமிழ்ப் பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டு தமிழ் நாடகத் துறையிலே சலியாது உழைத்து வந்த ஒரு பெருமகனார் ஆவார். பதிபக்தி, பம்பாய் மெயில், கதர் பக்தி, பஞ்சாப் கேசரி முதலியன இவருடைய நாடகங்கள். நாகபுரிக் கொடிப் போராட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு "தேசியக் கொடி" என்னும் ஒரு நாடகத்தையும் இவர் நடத்தினார். நம்மவர்கள் ஆங்கிலத் துரைத்தனத்துக்கு அஞ்சி வாழ்ந்த அந்நாளிலேயே, ஒரு தமிழ் நாடகக் குழுவை அழைத்துக்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்று தமிழ் நாடகங்களை நடத்தி அதில் வெற்றியும் கண்டவர். இத்தகைய பாவலரின் இளவலாகிய நம் பேராசிரியர் நாட்டுப்பற்றுக் கொண்டு, காந்தியடிகளின் தலைமையை ஏற்றுப் பணிசெய்து வந்ததில் வியப்பில்லை.

1908–இல் நடைபெற்ற சூரத் காங்கிரசிற்குப் பின்னர் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. அப்பொழுது காங்கிரஸ் தலைவர்களில் பலர் தலைமறைவாயினர். காங்கிரசில் ஈடுபாடு கொண்டிருந்த பேராசிரியர் இல்லத்தில் சுப்பிரமணிய பாரதி, ஆர்யா ஆகிய தலைவர்கள் தலைமறைவாக வாழ்ந்தனர். இவர்களோடு கொண்ட தொடர்பால் பேராசிரியருக்கு நாட்டு விடுதலை இயக்கத்தில் சிறுவயதிலேயே ஈடுபாடு மிகலாயிற்று. இவ்வாறு வந்து தங்கியவர்களில் ஒருவரான ஒரு துறவியின் தூண்டுதலால் இவர் சைவ உணவு உண்ணுதலை மேற்கொண்டார்.

நம் பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது, திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்கள் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருடைய வகுப்பில் நம் பேராசிரியர் இயற்கையாகவே தம்மிடம் குடிகொண்டிருந்த தமிழறிவை வெளிப்படுத்த, அதைக் கண்ட ஆசிரியர் அதில் மிகுந்த ஆர்வம் உண்டாகும்படி வாய்ப்பு நேரும் போதெல்லாம் செய்து கொண்டு

வந்தார். அவர் வளர்த்த ஆர்வத்தால் கல்லூரிப் படிப்புப் படிக்கும்போதே, ஓய்வு நேரங்களிலெல்லாம் தமிழ் நூல்களை நம் பேராசிரியர் பிறர் துணையின்றியே படித்து மகிழும் ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தார். பெரும் பயன் விளையாத பாடங்கள் நடக்கும் சில வகுப்புகளில் குறிப்பேடுகளில் தமிழ் நூல்களை ஒளித்து வைத்துப்படிப்பதும் உண்டு என்று இவர் தமக்கு இயற்கையாக இருந்த தமிழார்வத்தைப்பற்றிக் கூறுங்கால் கூறுவதுண்டு.

சிந்தாதிரிப்பேட்டையில் வேதாந்த சங்கம் ஒன்று அமைத்துக்கொண்டு காலையிலும் மாலையிலும் தமிழும், தருக்கமும், வேதாந்தமும் பாடமாக நடத்திக்கொண்டு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் தொண்டு செய்து வந்தார் ஒரு பெரியார். வெள்ளையர் ஆட்சியில் கல்வி பயிலும் இடங்களிலெல்லாம் கிறித்துவ சமயப் போதனையைக் கட்டாயமாக்கி வருவது கண்டு, நம்நாட்டுச் சமய அறிவு சிறந்து தழைக்க வேண்டும் என்பதற்காகச் சிவசங்கர பாண்டியாஜி என்பவர் தோற்றுவித்த இந்து தியலாஜிகல் உயர்பாடசாலையில் அது தோன்றியநாள் முதற் கொண்டே மிகமிகக் குறைந்த ஊதியம் பெற்றுக்கொண்டு தமிழ்ப்பணி புரிந்து வந்தவர் அப்பெரியார். கல்வியின் கரை கண்டவர் அவர்; இலக்கணம், இலக்கியம், தருக்கம், வேதாந்தம், சித்தாந்தம், சமணம், பௌத்தம் இன்ன பிறவற்றுள் எதைக் கற்கவேண்டுமென்றாலும் ஊதிய ஒன்றுமின்றித் தெளிவாகக் கற்பிக்கும் ஆற்றலுடையவர் அவர். தமிழ்நாட்டில் மூலைமுடுக்குகளுக் கெல்லாம் சென்று சமயத் தொண்டாற்றி வந்த அப் பெரியாரைச் செட்டியார் என்றே அனைவரும் வழங்குவர். அவரே பேராசிரியர் மகாவித்துவான் கோ. வடிவேலு செட்டியார் அவர்கள். நம் பேராசிரியர், இப்பெரும் புலவரிடமே முறையாகத் தமிழ் பயின்றார்.

காலை மாலை வேளைகளில் நடைபெறும் வகுப்புகள் நம் பேராசிரியரின் தமிழ்த் தினவைத் தீர்க்கப் போதவில்லை. இவருடைய தமிழ்ப் பசியோ யானைத்தீ போன்றது. இதனையறிந்த பெரும் புலவர் தமக்குப் பள்ளியில் விடுமுறை ஏற்படும் போதெல்லம் இவருக்குத் தனிமையில் சொல்லிக்கொடுக்கத் தலைப்பட்டார். முதலில் ஒரு

திங்களுக்கு ஒரு நூல், பிறகு ஒரு வாரத்துக்கு ஒரு நூல், பிறகு ஒரு நாளைக்கு ஒரு நூல், என்ற வேகத்தில் நம் பேராசிரியர் அவரிடம் பாடம் கேட்டார்.

திரு. இராமலிங்கத் தம்பிரான் என்பார் அக்காலத்தில் மறைந்துபோன நூல்களின் குறிப்புகளைச் சேர்த்துத் தொகுத்து வைத்திருந்தார். இவரிடமிருந்து நம் பேராசிரியர் தணிகைப் புராணம், சேதுபுராணம் ஆகிய நூல்களைக் கற்றுணர்ந்தார். திருவாளர்கள் அண்ணங்கராச்சாரியார், திருப்புறம்பியம் இராமசாமி நாயுடு ஆகியோரிடமிருந்து வைணவ சமய நூல்களை யெல்லாம் கற்றார்.

தமிழ் பயின்று வரும்போது விளையாட்டாக வித்துவான் புகுமுகத் தேர்வு, இறுதித் தேர்வு என்ற இரண்டையும் ஒரு சேர எழுதி மாநிலத்தில் முதல்வராக வெற்றி பெற்றார் நம் பேராசிரியர். கல்லூரியில் பயின்ற ஆங்கிலப் படிப்போடு தனிமையில் பயின்ற தமிழ்ப் புலமை அளவில் அவர் நின்றுவிடவில்லை. திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிறமொழிகளான சமசுகிருதம், இந்தி, பிரெஞ்சு, ஜெர்மனி ஆகிய அனைத்திலும் புலமை பெற்றார்.

பொதுவாகப் புதுப்புது நூல்களைப் படிப்பதென்றால் இவருக்குத் திரைப்படக் காட்சி காண்பது போலாகும். குழந்தைகளைப்போல் நூல்களைப் போற்றித் தழுவி மகிழ்வார். சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையம், சென்னைக் கன்னிமரா நூல்நிலையம் இரண்டிலும் இவருடைய கைபடாத நூல் இல்லையெனலாம். இவருடைய பெற்றோர் இவரைச் சம்பாதித்து வயிறு வளர்க்கும் நிலையில் வைக்கவில்லை. ஆகவே, துறை போகக் கற்றுப் பாடம் சொல்லும் நேரம் போக மற்ற நேரங்களில் இவரை நூல் நிலையங்களிலேயே பார்க்க முடிந்தது. பசி வயிற்றைக் கிள்ளினாலன்றி அவற்றை விட்டு வெளியேற மாட்டார். வெளியேறும்போது எடுத்துச் செல்லும் ஏழெட்டு நூல்களில் நான்கு ஒரு கக்கத்தில், ஒன்று கையில், ஏனையவை மற்றொரு கக்கத்தில் அமைய, கையிலுள்ள நூலைப் படித்தப்படி, நடந்தே வீட்டை அடைவார்.

தாம் பயிலுவதோடு நிற்கவில்லை நம் பேராசிரியர். பெரும்புலவர் அவர்களிடம் பாடம் கேட்டுவரும்போதே தாமும் வேதாந்த சங்கத்திலும் தம் வீட்டிலுமாகப் பாடம் நடத்தத் தொடங்கித் தாம் பயின்றதுபோல் விரைவில் பயிலும் திறத்தைத் தம்மையடைந்தவர்களெல்லாம் பெறச் செய்தார். விடுமுறைகளில் தொடர்ந்தாற்போல் ஐந்தாறு மணிநேரம் அவர் பாடம் நடத்தியும் சோர்வு கொள்ளாதது கண்டு ஆசிரியப்பணி புரிந்து கொண்டே அவரிடம் பாடம் கேட்டவர்கள் வியப்பதுண்டு. வாரம் ஒன்றற்குப் பதினைந்து மணி நேரம், இருபது மணி நேரம் வேலை செய்வதைப் பெருஞ்சுமையாக நினைத்து வந்த ஆசிரியர்கள் பலர், அவரிடம் பாடங் கேட்ட பிறகு, அவரைப் போலப் பணியாற்றி அப்பணியில் இன்பம் காணும் திறம் பெற்றார்கள்.

நம் பேராசிரியரிடம் தமிழ் பயின்று வித்துவான் பட்டம் பெற்றவர் பலர். பி.ஏ. (ஆனர்சு), எம்.ஏ. பட்டங்கள் பெற்றவர் பலப்பலர். எம்.ஓ.எல்., எம்.லிட்., பி.எச்டி. என்ற ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற்றவர் பலர்.

கல்விப் பணியோடு பல பொதுப் பணிகளிலும் பேராசிரியர் ஈடுபட்டார். கல்லூரிப் படிப்பு முடிந்த 1924ஆம் ஆண்டிலேயே இவர் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராய் மக்களுக்குத் தொண்டாற்றினார். 1936இல் சென்னை நகராண்மைக் கழகச் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று 1941 வரை தொண்டாற்றினார். நகராண்மைக் கழகத்தில் வரிக்குறைப்பு செய்வதில் முக்கிய பங்குகொண்டார். 1936இல் சென்னை நகரில் பாதாள சாக்கடை (under ground drainage)அமைக்க நகராண்மைக் கழகம் விரும்பியது. ஆனால், அதற்கேற்படும் செலவிற்காக மக்களிடம் பணம் பெறவேண்டிய நிலை இருந்தது. பொருள் கேட்பின் மக்கள் ஆதரவு குறையுமே என்று அஞ்சி இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தயங்கினர். அப்போது நம் பேராசிரியர் துணிந்து இது நகரத்திற்கும் மக்கட்கும் நல்லது என்று உறுதியுடன் தன் பகுதியாகிய சிந்தாதிரிப்பேட்டை மக்களிடம் பொருள் பெற்று இத் திட்டத்தை நிறைவேற்றினார்.

சுபாஷ்சந்திரபோஸ் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் சென்னை வந்தபோது அவருக்கு வரவேற்பு கொடுப்பதற்குக்

காங்கிரசுக்குள்ளேயே எதிர்ப்பு இருந்தது. அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது தாமே வரவேற்புக் குழுத் தலைவராக அமைந்து அவருக்குக் கடற்கரையில் ஒரு மாபெரும் வரவேற்பு அளித்தார்.

கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கிய 1916ஆம் ஆண்டிலேயே ஆதிதிராவிட மக்களுக்கு இரவுப்பள்ளிக்கூடம் நடத்தத் தலைப்பட்டு, நெடுங்காலம் தொண்டாற்றி அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்.

1925இல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராய்த் தொண்டாற்றினார்.

1935இல் தேசிய ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவராய்த் தொண்டாற்றினார்.

1936இல் மகாவித்துவான் செட்டியார் மறைந்த பிறகு இவரே வேதாந்த சங்கத்திற்குத் தலைமை பூண்டு வேதாந்தப் பாடங்களும் தமிழ்ப் பாடங்களும் நடத்தினார். அப்போதே சென்னைத் தமிழ்ச் சங்கத்தில் தலைமை பூண்டு தமிழ் மாணவர்கட்கும் தமிழாசிரியர்கட்கும் சிறந்த தொண்டாற்றித் தமிழன்னைக்கு முகமலர்ச்சியுண்டாகும் வகையில் தமிழாசியர்கள் சம்பள உயர்வு பெற வழி செய்தார்.

1941இல் காந்தியடிகள் ஆணைப்படி நாடு உரிமை பெறுவதற்காக மறியல் செய்து சிறை சென்றார்.

அக்காலத்தில் காங்கிரஸ் கட்சியார்க்கும் ஏனைய கட்சியாளர்க்கும் உரிமை பெறும் பொருள் பற்றி ஒரே மேடையில் பேசும் வாய்ப்பு ஏற்படுவதும் உண்டு. திருவாளர்கள். எஸ்.சீனிவாச ஐயங்கார், சர். பி. தியாகராசச் செட்டியார், சர். பி.டி. ராஜன் ஆகியோர்களுடைய அன்புக்குரியவராக விளங்கினார். ஒரு சமயம் பனகல் அரசர் பேசியதை வெட்டிப் பேசும் பொறுப்பு நம் பேராசிரியர் தலையில் விழுந்தது. ஆவேசமாகவும், முறையாகவும் இவர் பேசியதைக் கேட்டுப் பனகல் அரசர், இவருடைய அறிவு நுட்பத்தைப் பாராட்டி அணைத்துக் கொண்டதோடு, காஸ்மாபாலிடன் கிளப்பில் இவரோடு நெடுநேரம்

அளவளாவி இளைஞராயிருக்கும் இவர் உடலை ஓம்பி நெடுங்காலம் நாட்டுத் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்தினார். "கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்பதற்கிணங்கச் சொல் வேந்தராய் இளம் பருவத்தே இவர் திகழ்ந்தமைக்கு இஃதொரு சான்றாகும். நாடு போற்றும் பேச்சாளர் திரு. சத்தியமூர்த்திக்குப் பின் பாராளுமன்றத்தில் அவரிடத்தை நிரப்ப, காங்கிரசார் வேண்டியதனை இங்குக் குறிப்பிடலாம். வேறு காரணங்களால் அதனை இவர் மறுத்துவிட்டார். இவர் சொல்மாரி பொழியாத மேடையில்லை. இவர் தம் ஆசிரியரைப் போலவே மதிப்பொன்றும் கருதாமல் கூப்பிட்ட இடங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றுவார். அச் சொற்பொழிவுகளிலெல்லாம் மணிமணியான கருத்துகளோடு உணர்ச்சியும், உண்மையும் நிறைந்திருக்கும்.

1944ஆம் ஆண்டில் இவருடைய ஒப்புயர்வற்ற தமிழறிவின் சால்பினை உணர்ந்த இராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் இவரை அழைத்துச் சென்று தம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை (அன்று ஆராய்ச்சி, கீழ்த் திசைக்கலை, மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது, இந்தி ஆகியவை அனைத்தும் இத்துறையின் கீழிருந்தன) தலைவராய் அமர்த்திக்கொண்டார். நம் பேராசிரியர் அங்கே 1946–ஆம் ஆண்டு வரையில் தமிழ்ப்பணி ஆற்றி அதற்குப் பெருமையும் சிறப்பும் அளித்தார்.

1945ஆம் ஆண்டில் அண்ணாமலை நகரில் நடைபெற்ற இந்திய வரலாற்று மாநாட்டுக் கண்காட்சிப் பகுதிக்குச் செயலாளராயிருந்து இவர் சிறப்புறத் தொண்டாற்றினார். தத்துவம், வரலாறு, பொருளாதாரம், அறிவியல், சட்டம், மொழி முதலிய எல்லாத் துறைகளிலும் இவருக்குப் புலமையிருப்பதுணர்ந்து "அனைத்திந்தியச் சரித்திர மாநாட்டில்" புதிதாகத் திராவிடப் பிரிவு ஒன்று ஏற்படுத்தி இவரையே தலைவ ராக்கினார்.

சென்னை மாநில ஆந்திரப் பிரிவின் காங்கிரஸ் தலைவராகப் பேராசிரியர் பணியாற்றினார். துவக்கக் கல்விக் குழு (Primary education council)உயர்நிலைக் கல்விக் குழு (Secondary education council) ஆகிய இரண்டிலும் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். சென்னை நகர நூலகக் குழுவின் தலைவராக இருந்துள்ளார். சென்னை மாநிலக் குழுவின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

கொழும்பில் சைவ சித்தாந்த மாநாடு கூடியபோது அதன் தலைவராக இருந்தார். தமிழ் வளர்ச்சிக் கழகம் டெல்லியில் தமிழ் விழா நடத்திய போது அதன் இலக்கியப் பகுதிக்குத் தலைமை பூண்டார். திருவாவடுதுறையில் நடைபெற்ற திருமந்திர மாநாட்டுத் தலைவராக விளங்கினார். திருவனந்தபுரத்தில் டாக்டர் இராதாகிருட்டினன் திறந்து வைத்த சைவ சித்தாந்த மகாநாட்டிற்குத் தலைமை பூண்டார்.

தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் பதிப்புக் குழுவிலும் தமிழ் வளர்ச்சிக் கழகத்திலும், தமிழ்க் கலைமன்றத் (Academy of Tamil Culture)திலும் உறுப்பினராக இருந்து பணியாற்றினார்.

கல்லூரிப் பாடங்களைத் தமிழில் கற்பிக்கத் துணை செய்ய அமைத்த குழுவின் (Pilot college committee) சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களின் விருப்பப்படி உறுப்பினராகித் தொண்டாற்றினார். இத்திட்டத்தைச் செயல்படுத்த எல்லாக் கலைப்பாட ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்ட பயிற்சிக் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளார்.

சென்னையில் மாண்டிசோரி பள்ளிக்கூடத்தில் குழந்தைகட்குத் தமிழில் பாடம் கற்பிக்குமாறு செய்தார்.

சிந்தாதிரிப்பேட்டைப் பள்ளியின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்த இவர் பெண்கல்வி உயர்நிலைப் பள்ளி ஒன்றையும் துவக்கி வைத்தார்.

இவ்வாறெல்லாம் ஊதியம் கருதாமல் தொண்டாற்றி வந்த இவருக்கு நம் நாடு உரிமை பெற்ற பின் இவருடைய முன்னோர் பெற்றுவந்த வருவாய் வழியால் வந்த வருமானம் அறவே தடைப்பட்டதால் தமக்கினிய தமிழ்ப் பணியால் வருவாய் பெறச் சென்னை மாநிலக் கல்லூரியில் முன்றாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணிபுரிந்து

பின்னர் இணைவேந்தர் இராஜா. சர். முத்தையா செட்டியார் அவர்கள் வற்புறுத்தி வேண்டிக்கொண்டதன் பேரில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணி ஏற்றார். இவர் அங்கே பணியேற்றபின் அஃதடைந்த பெருமைகள் பலவாகும். இன்று வரை உலகம் ஆராய்ந்து வரும் வரலாற்று மொழி நூல் (Historical linguistics) ஒப்பியல் மொழிநூல் (Comparative linguistics) என்ற துறைகளின் வேறாக, புதிய பிரிவாகத் தோன்றியுள்ள விளக்க மொழிநூல் (Descriptive linguistics)என்னுந் துறை சில ஆண்டுகளாக அமெரிக்க அறிஞர்களாலும் பிறராலும் ஆராயப்பட்டு வருகின்றது. புதிய இத்துறையிலும் நமது பேராசிரியர் நாடு வியக்கும் வல்லுநராக விளங்குகினார். இவர் பலபல மொழிகளை அவ்வவற்றின் இலக்கணங் களோடு அறிந்தவராதலின் இவரை மொழியியல் துறையில் ஒருவராக இந்திய மொழியியலறிஞர் அனைவரும் பாராட்டி வருகின்றனர். அனைத்திந்திய மொழியியல் கழகம் 1958-இல் நம் பேராசிரியரைத் தன் தலைவராகக் கொண்டு பெருமை பெற்றது. இத் துறையிலீடுபட்டுள்ள மேனாட்டறிஞர்களும் இவரைப் போற்றுகின்றனர். இம்மொழியியலைத் தென்னிந்தியாவில் பரப்பிப் பலரை அத்துறையில் ஈடுபடச் செய்த பெருமை நம் பேராசியரைச் சாரும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. வகுப்பிற்கு மொழியியலைப் பாடமாக அமைக்க வழிவகுத்தவரும் இவரே. மொழியியல் ஆராய்ச்சியால் அனைத்துலக ஒற்றுமை காணலாம் என்ற நோக்கம் இவர் ஆர்வத்துக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

பேராசிரியர் அவர்களின் தொண்டுள்ளத்தின் ஒரு பகுதியே நாட்டுத் தொண்டாக அமைந்து, காந்தியடிகளின்பால் அவரை அழைத்துச் சென்றது: 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என வாழ்ந்த திரு.வி.க. விடம் அழைத்துச் சென்றது.

இளமையிலேயே தமிழில் பற்றும் பயிற்சியுமிக்கு விளங்கிய நமது பேராசிரியர் அன்று முதுபெரும் புலவர்களாக விளங்கிய பெரியோர் களிடத்தெல்லாம் தொடர்புகொண்டிருந்தார். டாக்டர். சாமிநாதய்யர், மறைமலையடிகள், விபுலானந்த அடிகள், ரா. இராகவையங்கார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் ஆகியவர்களோடு அளவளாவி அவர்களது பெருமதிப்பைப் பெற்றார்.

1916இலிருந்து தம் வீட்டுக்கருகிலிருந்த நெல்லையப்பரிடம் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் வாயிலாகப் பாரதியாரின் பாடல்களை முதன் முதலில் (பாரதியார் கையெழுத்தில்) சுவைக்கும் வாய்ப்பும் கிட்டியது. பின்னர், பாரதியார் புதுச்சேரியிலிருந்து திரும்பி வந்ததும் அவர் நெல்லையப்பர் வீட்டிலும் பேராசிரியர் வீட்டிலும் தங்கினார்.

தமிழ்நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் மடம் ஆகியவை இவருக்குப் பொன்னாடை போர்த்துப் பட்டங்கள் வழங்கி மகிழ்ந்தன. தருமபுர ஆதீனம் இவருக்குப் 'பல்கலைச் செல்வர்' என்ற பட்டத்தையும், குன்றக்குடி, திருவண்ணாமலை மடங்கள் டாக்டர். அழகப்பச் செட்டியார் தலைமையில் 'பன்மொழிப் புலவர்' என்ற பட்டத்தையும் கேடயத்தையும் வழங்கின. முதல் அமைச்சர் காமராசர் தலைமையில் டாக்டர். இராஜா. சர். முத்தையா செட்டியார் அவர்கள் 'பெருந்தமிழ் மணி' என்ற பட்டத்தையும், பொற்பதக்கத்தையும் அளித்தார்கள். 1958இல் பூ.சா.கோ. கலைக் கல்லூரி பொன்னாடை போர்த்துப் பொற்கலன் வழங்கியது. அதேயாண்டில் தோவை நன்னெறிக் கழகம் பொற்பதக்கம் வழங்கி மகிழ்ந்தது. தமக்குப் பட்டங்கள் தரும் இவ் ஆசிரியத் தந்தைக்கு மாணவர்கள் 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார்கள். இந்தியாவிலுள்ள தமிழ்ச் சங்கங்களெல்லாம் இவரைப் பாராட்டிப் பெருமை பெற்றன. தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயம் வழங்கியது. தமிழகத்துக்கு அப்பால் இலங்கையிலும் பெருஞ்சிறப்போடு விளங்கியவர் இவர்.

இரவில் சில மணி நேரம் உறங்கவேண்டும் என்ற இயற்கையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு உறங்குவாரேயொழிய விழிப்பு நேரம் முழுதும் பணி, பணி, தமிழ்ப் பணியேதான். இவரது இளமைத் துடிப்புக்குக்

காரணம் இவர் இளைஞரிடத்தும், குழந்தைகளிடத்தும் கொண்டுள்ள அன்பே எனலாம். அவர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு விழாக் கொண்டாடுவார். அவர்களோடு கூடிச் சிறுபிள்ளை போல் ஓடுவார்; ஆடுவார்; மழலைபேசிக் களிப்பார்.

மனைச் செல்வமும் மக்கட் செல்வமும் நிறைவுறப் பெற்ற இவர் இல்லறமே நல்லறம் என வள்ளுவர் வழியே வாழ்க்கை நடத்தியவர்.

இவருடைய புற வாழ்க்கை அமைதியான ஆற்றோட்டமாக அமையவில்லை. இவருக்குத் தரப்பட்ட துன்பங்களும், தொல்லைகளும் தடைகளும் ஏராளம். ஆனால், அவற்றை யெல்லாம் கண்டு அவர் ஒருகணமும் தயங்கியதில்லை. காந்தியடிகளிடமிருந்து தாம் கற்ற உண்மை வழியிலே கலங்காது நடந்தார்.

காந்தியடிகள் உரிமைப்போர் தொடங்கிய நாள் முதல் அதில் பேராசிரியர் ஈடுபட்டு இந்நாட்டு ஏழை மக்களுக்காக நெஞ்சம் நெக்குருகினார். தாமும் தூய கதராடை உடுத்தி எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். இந்த உலகின் வெளி ஆரவாரங்களுக்கும், வெற்றுச் சடங்குகளுக்கும் இவர் இசையவில்லை.

மாணவர்களின் வாயிலாக வெளிவந்தவை தவிர, பிறர் வற்புறுத்தலால் இவர் எழுதிய நூல்களும் உள்ளன. இவற்றில், பெரும்பாலானவற்றை இவர் தம் இளமைப் பருவத்திலேயே எழுதினார். அன்று சிறந்து விளங்கிய கலாநிலையம் போன்ற, இதழ்களில் தம் கருத்துகளைக் கொட்டினார். அவற்றைக் கூட்டித் தொகுத்துப் பார்த்தால் பேராசிரியரது பலதுறை அறிவு ஒளிருவதைக் காணலாம். மானத சாத்திரம், குலசேகரர், வள்ளுவரும் மகளிரும், வள்ளுவர் கண்ட நாடும் காமமும், கானல்வரி, நற்றிணை நாடகங்கள், அன்புமுடி, திருஞான சம்பந்தர், சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், சமணர் தமிழ் இலக்கிய வரலாறு, பிறந்தது எப்படியோ, தமிழா நினைத்துப்பார், நீங்களும் சுவையுங்கள், சூளாமணி உரைநடை, முல்லைப்பாட்டு (ஆங்கிலம்), அடிச்சொற்கள் (கால்டுவெல் ஒப்பிலக்கணத்தில் ஒரு பகுதி) முதலியன இவரது நூல்களில் சில. இன்னும் எத்தனையோ கட்டுரைகள் பல்வேறு

இதழ்களில் மலர்ந்து கிடக்கின்றன. தமிழன்னையின் புதிய அணியாகிய கலைக்களஞ்சியம் இவரது கைவண்ணத்தால் பொலிவுற்று விளங்குகிறது.

நம் பேராசிரியர் தமிழனின் முழு உருவையும் உலகுக்கு அறிவிக்கும் வல்லமை பெற்றவர். பழமையிலேயே நின்று, இன்றைய வாழ்க்கையைப் பார்க்க மறுப்பவ ரல்லர். தமிழ் மொழியில் தோன்றி வளர்ந்துள்ள இலக்கியங்களையெல்லாம் ஆய்ந்தவர். சிறந்த பிறநாட்டுப் புலவர்களையும் அறிந்தவர். பிற துறைகளிலும் எழுந்துள்ள வளர்ச்சியினை இவர் நன்கறிந்தவர்.

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்ற சொல்லுக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் தமிழறிஞர் தெ.பொ.மீ. அவர்களாவார்.

இத் தன்மையோர்களாலேயே தமிழுலகு வாழ முடியும்; வாழ்கிறது.

"உண்டால் அம்மஇவ் வுலகம்
... ...
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

பேராசிரியர் தெ.பொ.மீ அவர்களுடன் பேட்டி

சந்திப்பு

கோ. வி. வேணுகோபாலன்
இல. பழனியப்பன்
சா. பெ. மலைச்சாமி
ப. பூதலிங்கம்

வினா (1) ***தாங்கள் வரலாற்றுத் துறையில் பட்டம் பெற்றும் தமிழைத் தனியாகக் கற்றதன் காரணம் என்ன?***

விடை : நான் தமிழைக் கற்பதற்குக் காரணமாயிருந்தது என் குடும்பச் சூழலும் குடும்பத்துடன் பழகியவர்களின் உறவும். என் பாட்டனார் தமிழ் படித்தவர். என் தகப்பனாரும் தமிழ் படித்தவர். என் தமையனார் கிருட்டினசாமிப் பாவலர் தமிழ் இனிமையில் அதிக ஈடுபாடு கொண்டவர். எனவே, என் குடும்பச் சூழலே என்னைத் தமிழ் படிப்பதற்குப் பைத்தியமாக்கியது. என் பாட்டனார் திருக்குறள், நாலடியார் போன்றவைகளை மனனம் செய்தவர். நான் இன்று ஓரளவு தமிழ் நூல்களில் பயிற்சியுடையவனாய் இருப்பதற்கு அவரே காரணம். எனது இல்லத்திற்கு வரும் தமிழ்ப் புலவர்களின் பழக்கம் என்னைத் தமிழ்ப் பற்று மிக்குடையவனாக்கிப் படிக்கத் தூண்டியது.

பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய திரு. கிருட்டினசாமி அவர்கள் எனக்காகவே நன்னூலை ஒப்பிக்கச் சொல்வார்.

பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்த திருமணம் செல்வக்கேசவராய முதலியார் தமிழின் இனிமையைச் சுவைக்கும்படி பாடங்களைப் பயிற்றுவிப்பார். இவரது பயிற்றுவிக்கும் முறையும் என்னைத் தமிழ்க் காதலனாக்கியது. மணிமேகலை யில் ஏதாவது ஒரு பகுதி வரின் அனைத்தையும் படிக்கத் தூண்டுவார். கல்லூரியினின்றும் வெளி யேறிய பின்பு, இலக்கண இலக்கியங்களில் பெரும் புலவராய் விளங்கிய மகாவித்துவான் வடிவேலுச் செட்டியார் அவர்களிடம் தமிழ் பயின்றேன். எனக்குக் கல்லூரியில் ஆங்கிலம் கற்றுத் தந்தவர் ஆங்கிலப் பேராசிரியர் திரு.கே.வி. இராமனாதன் அவர்கள். வகுப்பில் அவரோடு தொடர்ந்து ஈடுபட்டுப் படிக்குங்கால், ஆங்கிலத்தில் அதிக ஈடுபாடு கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டது. ஆங்கில ஈடுபாட்டால் தமிழைப் புதிய முறையில் (approach) காணுகின்ற ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. தமிழைச் சுவைப்பதற்கு ஆங்கிலமே எனக்கு வழிகோலியது. சுருங்கக் கூறின் சூழலே என்னைத் தமிழாசிரியனாக்கியது.

(2) ***தங்கள் கடந்தகால அரசியல் வாழ்வைப் பற்றி ஏதேனும் சொல்ல இயலுமா?***

சிறுவயதிலேயே எனக்கு நாட்டுப்பற்று ஏற்பட்டது. 1908–9இல் சூரத் காங்கிரசில் வங்காளப் பிரிவினை ஏற்பட்டபோது நாடே விடுதலை உணர்ச்சியில் திளைத்தது. அப்பொழுது தலைவர்கள் பேசிய உணர்ச்சிப் பேச்சுக்கள் என் இளமை உள்ளத்தில் நாட்டுப்பற்றை வேரூன்றச் செய்தன. 1908–இல் தலைமறைவாயிருந்த காங்கிரசுத் தீவிரவாதிகள் என் இல்லத்தில் தங்கியிருந்தார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வ.உ.சி., பாரதியார்

போன்றவர்கள். நான் வீட்டில் படித்த பின்பு எட்டாவது வயதில் மூன்றாம் வகுப்பில் சேர்ந்தேன். எனக்கு எழுதப் படிக்கத் தெரிந்த காலத்திலேயே 'நாடு அடிமையில் அழுந்தியிருக்கிறதே' என்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. தமிழின் தனிப் பண்பாடும் தெரியத் தொடங்கியது. பல அரசியல்வாதிகளின் கூட்டுறவு நாட்டை விடுதலையாக்க வேண்டுமென்ற உணர்ச்சியைத் தூண்டியது. 1914இல் வ.உ.சி. விடுதலையானதும் என் வீட்டிற்கு வந்தார். விடுதலையுணர்ச்சியோடு பண்பாட்டு உணர்ச்சியும் சேர்ந்தே வளர்ந்தது. என் அண்ணன் நடத்திய 'பாரதி' பத்திரிகையுடன் பரலி. சு. நெல்லையப்பர் தொடர்பு கொண்டிருந்தார். பாரதியார் அவர்களும் பாடல் எழுதியனுப்புவார். அவர் பாடல்களைப் படித்ததால் எனக்குத் தமிழார்வம் மேலும் அதிகரித்தது. பழமைத் தமிழ், புதுமைத் தமிழ் இரண்டின் தொடர்பும் தெரிந்தது.

கல்லூரியில் பயின்று கொண்டிருந்த காலத்தே நீதிக் கட்சி இயக்கத்தின் சமுதாயச் சீர்த்திருத்தத்தி லெல்லாம் பங்கு கொண்டேன். மேல்சாதி, கீழ்சாதி என்ற வேற்றுமையை அகற்ற வேண்டுமென்ற உணர்ச்சி உச்ச நிலையையடைந்தது.

எனது இல்லத்தின் பக்கத்தே ஐயர் குடும்பங்கள் பல இருந்தன. ஐயர் குடும்பப் பெண்கள் அனைவரும் பால்காரன் ஒருவனை "அடா" என்றே அழைத்து வந்தனர். எனக்கு இச்செயல் ஆத்திரமூட்டியது. நான் அந்தப் பால்காரனை அழைத்து "இனிமேல் அவர்கள் உன்னை 'அடா' என்று அழைத்தால் 'நான் உங்களை அடி' என்று நாளைக் காலை அழைப்பேன்" என்று "நோட்டீசு கொடு" என்றேன். இதன் முடிவு

மறுநாள் காலை 'அடா' என்ற சொல் 'வாப்பா' என்று மாறியது.

Home rule movement இருந்த சமயம் காமத், கோகலே பேச்சுக்களை மொழி பெயர்ப்பார். கோகலே பேச்சுக்களைப் படித்தும், அருண்டேல் சொற்பொழிவு களைக் கேட்டும் அரசியல் அறிவு பெற்றேன். கூடவே விடுதலை வெறியும் பெற்றேன். மகாத்மா காந்தி கைதானபோது பட்டினியிருந்தோம். சென்னைக் கடற்கரையில் கூட்டம் போட்டோம். காந்தி கதர் அணியச் சொன்னார். அதன்படி நான் நான்காம் படிவத்திலிருந்தே கதர்த்துணி அணியத் தொடங் கினேன்.

1924இல் சீனிவாச ஐயங்காரின் சுயராஜ்ய இயக்கத்தில் சேர்ந்தேன். இந்த இயக்கத்தின் நோக்கம் எல்லா நிலையங்களையும் கைப்பற்ற வேண்டுமென்பது. நானும் அதே ஆண்டு சென்னை நகராண்மைக் கழகத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றேன். என் அண்ணனும் இந்த இயக்கத்தில் இருந்தார்.

பனகல் அரசர், சர்.பி.டி. தியாகராயர் ஆகிய தலைவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அவர்களின் அன்புக்குரியவனாயினேன். எனது வெற்றியைப் பாராட்டு முகத்தான் சென்னை, பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் பாராட்டுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்திருந்தார்கள். சர்.பி.டி. தியாகராயர் அந்தப் பாராட்டுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி என்னைப் பாராட்டினார்கள். பலர் தியாகராயரிடம் சென்று "என்ன காங்கிரசுக்காரனைப் பாராட்டு கிறீர்களே!" என்றனர். அதற்கு அவர் 'கட்சி

காங்கிரசாயிருந்தாலும் பையன் நல்லவன்' என்றார். எனக்கு, இக்காலத்தில் தமிழ்த் தென்றல் திரு.வி.க., பெரியார் ஈ.வெ.ரா. ஆகியோருடைய தொடர்பு ஏற்பட்டது. ஈ.வெ.ரா. அவர்களின் சமுதாயச் சீர்திருத் தங்களை ஒப்புக் கொண்டாலும், அவரது அரசியற் கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

சத்தியமூர்த்தி ஐயர் அவர்களுக்கு என்மேல் பற்று அதிகம். நகரமன்ற மேயர் தேர்தலுக்கு என்னுடைய பெயரைக் குறிப்பிட்டார். ஆனால், கட்சி உறுப்பினர் களுக்கிடையே நடைபெற்ற தேர்தலில் நான் தோல்வியுற்றேன். நான் தோல்வியுற்றவுடன் சத்தியமூர்த்தி அவர்கள் கண்ணீர் விட்டார்.

திரு. சத்தியமூர்த்தி, திரு. பிரகாசம், நான் ஆகியோர் நகர மன்றத்தில் சிறப்புறுப்பினர்களாக (Alderman) இருந்தோம். 1939இல் சுபாசு சந்திரபோசு காங்கிரசுத் தலைவராயிருந்தார். அவருக்கு எதிர்ப்புணர்ச்சிகள் இருந்தன. அவர் சென்னை வந்த காலத்தில் அவரை வரவேற்கும் குழுத் தலைவனாக இருந்தேன். 1940–இல் காந்தியடிகளின் ஆணைப்படித் தனி மனிதர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றேன். 1942–இல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டேன்.

திரு. காசா. சுப்பராவ் அவர்கள் (இன்றைய 'சுயராஜ்யா' இதழின் ஆசிரியர்) என்னை எம்.பி. தேர்தலுக்கு நிற்கும்படி வேண்டினார். ஆனால், நான் நிற்கவில்லை. நிற்காததற்குப் பணச் சிக்கலும் ஒரு காரணம். இதற்குப் பிறகு நான் தமிழ்த் தொடர்பு மிக்குடையவனானேன்.

(3) தங்களுடைய தமிழ்த் துறையோடியைந்த வாழ்க்கையினைப் பற்றிக் கூற இயலுமா?

நான் 1933–இல் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றேன். சென்னை வேதாந்த சங்கத்தில் இலவசத் தமிழ்க் கல்லூரி நடத்தி, எம்.ஏ., வித்துவான் போன்ற தேர்வுகளில் கலந்துகொள்ள விரும்பியவர்களுக்குப் பாடம் நடத்தினேன். 1942–இல் சென்னைத் தமிழ்ச் சங்கத்தைத் துவக்கித் தமிழ்க் கல்லூரியை விரிவாக நடத்துவதில் அதிக ஈடுபாடு கொண்டேன். இன்று தமிழ்ப் பேராசிரியர்களாய் விளங்குகின்ற பலர் அதில் பயின்றவர்களே.

என்னிடம் ஒரு பெரிய குறை !யார் எதனைப் புரியாது என்பார்களோ அதனையே முதலில் படிக்கத் தொடங்குவேன். காட்டாக, வேதாந்த நூற்களைப் படித்தமையைக் கூறலாம். இலக்கணம், தணிகைப் புராணம் இவைகளைக் கடினமென்பர். ஆனால் நான் இவைகளையே விரும்பிப் படித்தேன்.

1944 முதல் 1946 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கலை, கீழ்த்திசை, ஆராய்ச்சி ஆகிய மூன்று துறைகளுக்கும் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

திரு. அவினாசிலிங்கம் அவர்கள் சென்னை மாநிலத்தின் கல்வி அமைச்சராயிருந்தபோது டாக்டர். சி.வி. இராமனை, கல்வி முறை, ஆராய்ச்சியினடிப்படையில் அமைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்த அடிப்படையில்தான் இராஜாஜியின் விருப்பத்திற்கேற்ப மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவரானேன். நான்

தமிழில் எம்.ஏ. பட்டம் பெறாததால், நான் தலைவரா வதற்குச் சில தடைகள் ஏற்பட்டன. எனினும், "அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய அனுபவம் பெற்றிருந்தமையால், எம்.ஏ. பட்டம் பெறாமை ஒரு குறை அன்று" எனத் துணைவேந்தர் திரு. ஏ.எல். முதலியார் அவர்கள் குறிப்பிட்டுத் தலைமைப் பொறுப்பினைப் பெறும் வாய்ப்பினை அளித்தார்கள்.

"அரசியலில் ஈடுபட்டுள்ள ஒருவர் எங்ஙனம் கல்லூரிப் பொறுப்பிலும் பங்கேற்க முடியும்" என்று சிலர் வினாவெழுப்பவே, நான் அரசியலிலிருந்து விலகிவிட்டேன். எனினும் இன்றுவரை காந்தியாரின் கொள்கைகளை நான் கைவிடவில்லை.

(4) *தமிழ் நாட்டு வரலாற்றையும் தமிழ் மொழி வரலாற்றையும் தெளிவான முறையில் அறிய முடியவில்லை. இதற்குத் தங்களைப் போன்றவர்கள் முயற்சி செய்து, அவற்றை நூல் வடிவில் அளிக்கலாமே?*

நான் செய்த தமிழ்த் தொண்டெல்லாம் தமிழுணர்ச்சியை ஊட்டியதே. அரசியற் கூட்டங் களோடு, இலக்கியக் கூட்டங்களுக்கும் போவேன். உயர்திரு. வடிவேல் செட்டியாரவர்கள் வேதாந்தம், தர்க்கம் முதலிய அனைத்திலும் எனக்கு அறிவூட்டி னார். நிலையான தொண்டுக்கு நேரமில்லை. அப்போது நூல் எழுதினாலும் படிப்போர் யாருமில்லை. அறிவுவிருந்து சுவைத்தேன். அதே நேரத்தில் மக்களின் துயரமும் கண்டு கலங்கினேன். இவ்விரண்டு நிலைகளுக்கிடையே சிக்கித் தவித்தேன். எப்போதும் இந்தச் சிக்கலில் உழன்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எனது தமிழ்த் தொண்டு துவங்கியது எனினும் நிலையான தொண்டு செய்ய இயலவில்லை. நேரமில்லாமையே நூல் எழுதாமைக்குக் காரணம். நான் எழுது வதில்லை; நான் சொல்லச் சொல்ல சிலர் எழுதுவது வழக்கம். மொழி வரலாறு, இலக்கிய வரலாறு ஆகியவற்றை எழுத வேண்டுமென்ற ஆர்வமுண்டு. இனித்தான் அவை உருப்பெற வேண்டும்.

மொழி வரலாறு மட்டும் அனைத்திந்திய மொழியியற் கழகத்தார் (All India Linguistics Association) என்னைக் கேட்டுள்ளனர். அதற்காக எழுதுவேன். இப்பொழுது மொழியியற் துறையினை அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் திறந்துள்ளோம்.

1944–45இல் இலக்கிய வரலாற்றினை எழுதவேண்டு மென்று நினைத்தே பாடம் நடத்தினேன். நடத்தும் பொழுது இருபதாம் நூற்றாண்டிலிருந்தே தொடங் குவேன். ஏனெனில், மாணவர்க்கு எளிதில் விளங்கு வதற்கு, நூற்றாண்டு வாரியாகப் பாடம் சொல்லு தலுண்டு. 'கலைக்கதிர் வெளியீட்டார்' நான் ஓரளவு சுருங்க எழுதிய இலக்கிய வரலாற்றினை வெளியிட இருக்கின்றனர்.

(5) *'தமிழ் பிறந்தது வடமொழியிலிருந்துதான் என்பது தங்கள் கருத்து' என்று பலர் சொல்லுகிறார்களே. உண்மைதானா?*

தவறு. நான் பாடம் நடத்தும்போது உங்களிடம் அப்படிக் கூறியிருக்கின்றேனா? ஒருவேளை, என்னைக் காங்கிரசுக்காரன் என்று கருதி அங்ஙனம் தவறாகக் கூறியிருக்கலாம். காங்கிரசுக்காரன் என்றால் தமிழுக்கு விரோதி என்று சிலர் கருது

கின்றனர். கட்டாயத்தால், எந்த மொழியையும் யாரையும் கற்கச் செய்துவிட முடியாது.

"தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழமுடியும்" என்ற கருத்துடையவன் நான். தமிழர் பத்து நோபல் பரிசாவது பெறவேண்டுமென்ற விருப்பமுடையவன் நான். தாகூர் நோபல் பரிசு பெற்றதால் உலகத் திலுள்ளோர் எல்லோரும் வங்காள மொழியைக் கற்றனர். அதுபோல, தமிழர் நோபல் பரிசு பெற்றால், உலகெலாம் தமிழ் பரவும் என நம்புகிறேன். எத்துறையினராயினும் தமிழ்ப் பற்று கொண்டு போற்றுவாராயின் தமிழ் உலக மொழியாகும்.

பொதுமக்கள் அனைவரும் பலமொழிகளைக் கற்காவிட்டாலும், அறிவிற் சிறந்த சிலராவது பிற மொழிகளை நன்கு பயின்று, அம்மொழிகளின் மூலம் தமிழ்மொழி உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். இந்த அடிப்படையில் தான் ஒரு சிலராவது வடமொழியைக் கற்கவேண்டுமென்ற விருப்பம் எனக்குண்டு.

இன்று உருசியாவில் தமிழ் கற்கும் ஆர்வம் மிகுந்துள்ளது. சான்றாக, 'சிவஞான சித்தியார்' நூலை அனுப்புமாறு எழுதிக் கேட்டுள்ளனர். நானும் ஒரு நூலை அனுப்பியுள்ளேன். பிரஞ்சு, செர்மன் முதலிய மொழிகளை நமது பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கிறோம். ஆனால், எல்லோரையும் கட்டாயப்படுத்த முடியுமா? 'கம்பன், வான்மீகி முதலியோரைப் படித்து ஸ்புத்னிக் (Sputnik) செய்ய முடியுமா?' என்று நான் கேட்டால் உடனே தமிழ்த் துரோகி என்கின்றனர். தமிழன்பு இல்லாதவன் யாருமே கிடையாது. நான் தமிழன்பினாலே இத்துறைக்கு வந்தவன்.

மேலே ஆங்கிலப் புத்தகமும் கீழே தமிழ்ப் புத்தகமும் வைத்துத் திருட்டுத்தனமாய்ப் படிப்பது என் வழக்கம், நீங்கள் வகுப்பில் 'குமுதம்' படிப்பது போல. 'ஆங்கிலத்தில் பேசினால்தான் மதிப்பு' என்றிருந்த அக்காலத்திலேயே நாங்கள் தமிழில்தான் பேசிவந்தோம். 'ஒருமொழியைப் பேசத் தெரியாதவரே அம் மொழியை வெறுப்பர். எந்த மொழியும் தமிழ் மொழியை அழித்துவிட முடியாது' என்பதே எனது திடமான நம்பிக்கை.

(6) *பிற மொழிகளை, குறிப்பாக வடமொழியை நீக்கித் தமிழ் தனித்து இயங்க முடியுமா?*

முடியும். அதற்கு வேண்டிய முயற்சி தமிழர் எடுக்க வேண்டும். முயற்சியில்லாமையினாலே இயலா துள்ளது. விஞ்ஞானச் சொற்கள் முன்பே மக்களி டத்தில் வழங்கத் தொடங்கிவிட்டன. உடனே இம் முயற்சியில் ஈடுபட்டால்தான் நம் சந்ததியாராவது தனித்தமிழ் வழங்கத் தலைப்படுவர். புத்தகத்தில் மட்டும் சொற்களை மாற்றி, தமிழாக்கினால் போதாது. பொதுமக்கள் மொழியையும் நாம் கவனிக்க வேண்டும். தொழிலாளர்களிடம் தனித்தமிழ் இயங்கும் முறையைப் புகுத்துவது கடினமே. Driver, Conductor, Bolt, Busபோன்ற சொற்கள் அவர்களை அறியாமலேயே அவர்கள் தொழிலிடைப் புகுந்திருக் கின்றன. எனவே, இவற்றையெல்லாம் அவர்களி னின்றும் பிரித்துத் தனித்தமிழ் பேசச் செய்வது கடினமே. இந்தி, தமிழ், வடமொழி – கலைச் சொற்கள் ஆகிய இவற்றிடையே போராட்டமுள்ளது. இந்நிலை நீடிப்பின் எதுவும் வளராது.

(7) *மொழி நூல் ஆய்வை முதன் முதல் பயன்படுத்திய நாடு எது? தமிழ் மொழி நூல் துறை வளர்ச்சி பற்றித் தங்கள் கருத்து.*

செர்மனியில்தான் முதன் முதல் மொழிநூல் ஆய்வு

பயன்படுத்தப்பட்டது. பின்னர் எல்லா நாட்டினரும் மேற்கொண்டனர். அமெரிக்காவிலும், ஐரோப்பா விலும் வளர்ந்துவரும். எந்த நாட்டில் பலமொழி பேசுகின்றனரோ அந்த நாட்டில் தான் இத்துறை வெற்றி பெற முடியும்.

1953–இல் ராக் பெல்லர் நிறுவனத்தார் மொழித் துறைக்குப் பணம் தந்தனர். இதைப் பயன்படுத்தத் தமிழர் யாரும் முன்வரவில்லை. ஆனால், எனக்கு விருப்பமிருந்தது. கோடை விடுமுறைகளிலெல்லாம் கருத்தரங்கு நடைபெறும். அக்கருத்தரங்கில் (Seminar) பல மொழிநூல் அறிஞர்கள் கலந்து கொள்வார்கள். நான் அங்குப் போனதால் தமிழுக்கும் ஒரு தனி இடம் கிடைத்துள்ளது. வட நாட்டின ரெல்லாம் பொறாமை கொள்ளும் அளவுக்கு நமது பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறை (Linguistics Department) தொடங்கப்பட்டுள்ளது. நான் போய் முயற்சி செய்யவில்லை என்றால் இப்போது இங்கு மொழியியல் துறை தோன்றியிராது.

(A Tamil Dictionary on Historical Principles) வரலாற்றுத் தமிழகராதிக்குப் பணம் தருவதாகப் பல்கலைக் கழக மான்யக் குழுவில் (U.G.C.) ஒப்புக் கொண்டுள்ளார்கள். தென்னிந்தியாவில் திராவிட மொழிகளில் பெரிதும் ஆராய்ச்சி செய்யவேண்டி யுள்ளது. ஏனெனில், திராவிட மொழிகளிலும் எழுதப் படாத மொழிகள் சில உள. இந்தியாவில் மொழியியல் ஆய்வுத் துறைப் பகுதிகள் அண்ணாமலை, பூனா, ஆக்ரா, கல்கத்தா ஆகிய நான்கு பல்கலைக் கழகங்களில் மட்டுமேயுள்ளன.

(8) ***இந்தியாவின் பொது மொழிச் சிக்கல் குறித்துத் தங்கள் கருத்தென்ன?***

பேசிக் கொண்டிருப்பதாலேயே சிக்கலாயுள்ளது. இயற்கையின் முடிவுக்கு இதை விட்டுவிட வேண்டும்.

மொழி கற்றுக் கொள்வதால் நன்மையே. சொல்லிக் கொடுக்கும் முறை மாறினால் எம் மொழியையும் எளிதில் கற்கலாம். இந்தி மொழியைத் திணிப் பதால்தான் நீங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதை நான் ஆதரிக்கிறேன். அன்பினால் எதையும் சாதிக்கலாம். 'வலியுறுத்தல்' முன்னேற்றத்திற்கு வழிகோலாது.

(9) ***திறனாய்வுத் துறை தமிழில் வளர்ச்சி பெற்றுள்ளதா? இல்லையெனில் வளர்ச் சிக்குச் செய்ய வேண்டிய வழிகள்.***

திறனாய்வு செய்பவர் முதலில் இலக்கியத்தை அனுபவித்தவராக இருக்கவேண்டும். இலக்கியத்தை இலக்கியமாகப் பார்க்கும் கண் நமக்கு இன்னும் வளரவில்லை. இலக்கியத்தை இலக்கியமாய்ப் பார்த்தால்தான் உண்மையான திறனாய்வு வளரும். நச்சினார்க்கினியர் பிராமணர் ஆனாலும் சைனமதம் போன்ற பிற மதங்களை அணுகி உரை எழுதினார். அனுபவம் இருந்தால் ஆராய்ச்சி தன்னாலேயே வளரும், பாரதிதாசனாரின் 'செந்தமிழ்த் தேனைப் பிழிந்து தின்னும்' என்ற வரிகளை ஒரு நண்பர் கூறக் கேட்டு, 'தேனைத் தின்னுவது எப்படி?' என்று கேட்டேன். அதற்கு ஏதாவது நயம் வைத்துத் தான் கவிஞர் எழுதியிருக்க முடியும் என்றேன். அந்த நண்பர் போய் பாரதிதாசனாரிடம் நான் குறை கூறுவதாகக் கூற, அவர் என்னைத் தவறாகக் கருதினார். நான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றபோது 'தின்னும்' என்பதில் தான் நயம் இருக்கிறது என்று கூறினேன். 'தின்னும்' என்ற சொல் கொறித்துச் சுவைக்கும் என்ற பொருள் தந்து நயமாக உள்ளது என்று அவரிடம் கூறினேன்.

மனிதன் ஆராய்ச்சியினால் சொல்ல முடியாததைச் சுவைப்பதனால் சொல்ல முடியும். அனுபவிக்கும் முறை தமிழ் நாட்டில் இன்னும் வளரவில்லை.

பாரதிதாசன் பாடல்களில் உள்ள இலக்கியச் சுவையைச் சுவைக்க மறுக்கின்றனர்.

"இறைவனைத் தொழுவாய் மனமே" என்று பாரதிதாசன் பாடியதைக் கேட்டு நான் எங்ஙனம் இவர் இறைவனைப் பற்றிப் பாடுவார் என்று சந்தேகித்தேன். ஆனால்,

"இறைவனைத் தொழுவாய் மனமே – ஈரோட்டு
இறைவனைத் தொழுவாய் மனமே"

என்று பாடுவதைக் கண்டேன். இங்ஙனம் எழுதுவதில் சுவையுள்ளது. திட்டும் பாடலையும் சுவைக்க முடியும். எனவே, அனுபவித்தலே இலக்கியத் திறனாய்வுக்கு ஆதாரமாகும். இனி மேல்தான் இத்துறை தமிழ்நாட்டில் நன்கு வளர வேண்டும்.

(10) *தற்கால இலக்கிய வளர்ச்சி பற்றித் தங்கள் கருத்து:*

இலக்கியம் வளர்ந்துள்ளது. நல்ல தண்ணீரிலும் குப்பை உண்டு. சிலர் குப்பையையே பார்க்கிறார்கள். எனவே வளர்ச்சியில்லை என்கிறார்கள். சிலர் குப்பையே தண்ணீர் என்கின்றனர். நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. இரண்டையும் ஒப்பிட்டு ஆயும் முறையே இலக்கிய வளர்ச்சிக்கு வழி கோலும்.

(11) *மலிவுப் பதிப்பு நூல்கள் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றனவா?*

நல்ல பதிப்புக்களாய் இருந்தால் தமிழ் வளரும். நானும் மலிவுப் பதிப்புக் கழகத்தில் ஓர் உறுப்பினனே. 1925இல் இரண்டணா விலையில் திருவாசகத்தை 5 லட்சம் படிகள் அச்சடித்து விற்றோம்.

(12) *மாணவர்களுக்கு, திருக்குறள் முழுவதையும் உரைநடையாக்கிக் கட்டாயப் பாடத் திட்டமாக ஏன் சேர்க்கக் கூடாது?*

பாட்டை உரைநடை யாக்குவதில் நம்பிக்கையில்லை; திருக்குறளைக் கட்டாயப் பாடமாக்குவதில் நன்மையுமில்லை.

(13) *தமிழகப் புலவர் குழுவைப் பற்றித் தங்கள் கருத்து.*

அவர்கள் அரசியலில் ஈடுபடாமல் செயலாற்ற வேண்டும் என விரும்புகிறேன்; உலகத்தில் தமிழை ஒளிரச் செய்வார்கள் என நம்புகிறேன்.

(14) *திராவிட மொழிகளின் வளர்ச்சிக்குத் தாங்கள் கூறும் வழிகள்.*

உலகத்திலுள்ள முன்னேறிய மொழிகள் போல இவையும் முன்னேற வேண்டும். திராவிட நாட்டில் மொழிகள் சிறப்புற வாழ்வதுபோல் உலகில் சிறப்புடன் வாழவேண்டும் என்பது என் ஆசை.

(15) *சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் தேவைதானா?*

சென்னை மாநிலம் தமிழ்நாடு என்ற பெயருடன் இருக்க வேண்டும்.

(16) *மொழிநூல் (Linguistics) வளர்ச்சிக்கு மாந்தநூல் (Anthropology) சமூகவியல் (Sociology) ஆகியவற்றின் உதவி தேவைதானா?*

ஆம். தொடக்கத்தில் மாந்தநூல் வல்லுநர்கள் (Anthropologist) தான் மொழித் துறைக்கு

வழிவகுத்தார்கள். ஆனால், இன்று இத்துறை, தனித் துறையாக வளர்ந்துள்ளது. இருப்பினும் இவைகளின் தொடர்பு இன்றளவும் தேவையாகவுள்ளது.

(17) **மாணவர் உலகத்திற்குத் தாங்கள் கூறும் அறிவுரைகள், தமிழ் வளர்ச்சிக்கு மாணவர்கள் செய்ய வேண்டிய பணிகள் :**

மாணவர்கள் மனிதத் தன்மையோடு இருக்க வேண்டும். நன்கு உழைக்க வேண்டும்.

ஸ்புட்னிக் (Sputnik) யுகத்திற்கு ஏற்றாற்போல மாணவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவனும் இந்த நாட்டுக்காக உயிரை விடவேண்டியதில்லை. நன்றாக உழைத்தாலே போதுமானது. பரந்த நோக்கம் வேண்டும். எல்லாமே ஏழையின் பணம் என்பதை மனதில் கொண்டு படிக்க வேண்டும்.

அரசியல் சூழ்ச்சிகளில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது.

மாணவர்கள் நீதிபதிகளாயிருந்து அரசியற் கட்சிகளைக் காணவேண்டும்.

வகுப்பு, விடுதி எங்கும் குடியரசு வாழவேண்டும்.

நன்றி : தெ.பொ.மீ. மணிவிழா மலர்